**பிபில பிரதேச சபை**

**மொனராகலை மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 17 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிபில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி செயற்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 54 காணித் துண்டுகளின் பெறுமதியினை தகைமையுடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 25 காணித் துண்டுகளின் பெறுமதி மற்றும் 12 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 186,501,110 தொகை எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் தகைமையுடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொதுக் களஞ்சிய பண்ட இருப்பு ரூபா 76,090 தொகை எனினும், அவை ரூபா 467,634 தொகை என ரூபா 391,544 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பொதுக் களஞ்சியப் பிணை நுகர்வுச் செலவு ரூபா 681,424 தொகை செலவுகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மருந்து வகை இருப்பு நுகர்வுச் செலவு ரூபா 119,282 ஆகக் காணப்பட்ட போதிலும் அவை ரூபா 425,618 தொகை என கணக்கீடு செய்யப்பட்டமையால் செலவுகள் ரூபா 306,336 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நன்கொடையாகக் கிடைத்திருந்த மருந்து வகை இருப்பின் பெறுமதி ரூபா 544,900 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட பலவின வருமானம் ரூபா 530,913 தொகையினை வருமானம் எனக் கணக்கீடு செய்யப்படாமல் பலவின வைப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானத்தில் நூற்றின் 03 சேவைக் கட்டணப் பெறுமதி ரூபா 117,055 இனால் சீராக்கல் செய்யாமையால் பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப் பண பெறுமதி ரூபா 117,055 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்வரும் ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த வீத வரி ரூபா 1,024,361 தொகையினை முற்பெறுவனவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

08 கணக்க விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,531,382 தொகை காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 24,606,868 ஆக இருந்தது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------------

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,535,337 தொகையான பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,019,059 தொகை செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 27,000,220 தொகையான சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 291,359 தொகைக்கான பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

-----------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,759,228 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வருமானத்தை மிகைத்துள்ள மீண்டுவரும் செலவு ரூபா 43,192,288 தொகையாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 54,951,516 ஆக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

-----------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 7,965,588 தொகையாக நிலுவை வருமானத்தை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வீத வரி

---------------

(அ) மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வீத வரி வருமானம் ரூபா 3,236,921 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை நடைமுறை வரி என சேகரிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 1,338,864 மாத்திரமே. அவை மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் நூற்றிற்கு 41 போன்ற குறைந்த சதவீதமாக காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் வீத வரி அறவீடு மிகவம் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 5,772,520 தொகையாகக் காணப்பட்டதுடன் அம் மீதியில் ஆண்டின் போது ரூபா 1,253,137 தொகை ஒன்று அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 22 ஆகக் காணப்பட்டதுடன் வீத வரி நிலுவை ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக்கொண்டு சென்றுள்ளது.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக நிலுவை வீத வரியாக அறவிடப்படவேண்டிய ரூபா 4,519,383 தொகையினை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் உள்ளவாறு ரூபா 10,000 தொகையினை மிகைத்த நிலுவை மீதியொன்று காணப்படும் 25 வீத வரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 692,049 தொகையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 155,156,158,159,162 மற்றும் 163 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 செலுத்துகை டவர் கட்டணம்

---------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் எல்லைப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 07 செலுத்துகை டவர்களுக்காக 2015 ஆண்டு இறுதி வரை வருடாந்த வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 வாடகை

-----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஜூன் 28 திகதிய இலக்கம் எம்ஓ/ஆர்பீ/363 கொண்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பிபில பொதுச் சந்தையில் காணப்பட்ட 67 கடைகளை வாடகைக்கு கொடுக்காமையால் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 9,849,600 தொகை வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் இலக்கம் 177 மற்றும் 178 மற்றும் அர பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 500 மாதாந்த வாடகைக்குச் சபைக்குச் சொந்தமான மரக்கறிச் சந்தையிலுள்ள 18 கடைகளில் 14 கடைகளின் வாடகைக் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் இருந்து மீளாய்வாண்டிற்காக வாடகை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 3,915,465 மற்றும் முத்திரைக் கட்டணத் தொகை ரூபா 4,676,267 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.3 மிகை விதிப்பு

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு சொல்லவேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 16,287 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

மின் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகள் செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள், வீதி விளக்குகளை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக சேவை வழங்குனர் ஒருவராகக் கடமையாற்ற வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 209,860 தொகையான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.2 மனித வள முகாமைத்துவம்

--------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 19(1)(1) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூலமாக பூர்வாங்க அங்கீகாரம் இன்றி அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் சுகாதார தொழிலாளர்கள் மற்றும் சாரதிகள் ஆகிய பதவிகளுக்காக மூன்று ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2015 மார்ச் முதல் திசெம்பர் வரை ரூபா 518,397 தொகையொன்று சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிபில பிரதேச சபையில் 5 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியை விட 16 ஊழியர்கள் ஈடுபடுத்தியிருந்தனர்.

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 71 இன் ஏற்பாடுகள் மற்றும் 2014 நவம்பர் 12 திகதிய இலக்கம் 25/2014 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கைக்கு முரணாக அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் கடமையாற்றிய நூலக உதவியாளர், சுகாதார தொழிலாளர் மற்றும் சாரதிகள் ஆகிய பதவிகளுக்காக 3 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு வெளியே நிரந்தர சேவைக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 132(ஓ) மற்றும் (ஔ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் எழுத்துமூலமான பூர்வாங்க அங்கீகாரம் இன்றி சபைக்கு உரித்தில்லாத 2 முன்பள்ளிகளுக்காக ரூபா 207,480 தொகைக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

3.4 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிபில வாணிப கட்டிட நிர்மாணத்தின் II கட்டத்தின் கீழ் ரூபா 10,415,143 தொகை பெறுமதியான மதிப்பீட்டை 4 பகுதிகளாகப் பிரித்து பெறுகைகள் நடவடிக்கை முறைக்கு வெளியே 4 சங்கங்களுக்கு 2014 ஆண்டின் போது சாட்டப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே மாதத்தில் நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனினும், 2016 மே 13 திகதி வரை ரூபா 3,141,647 தொகை பெறுமதியான வேலைப் பகுதிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாணிபக் கட்டிடத்தில் நிர்மாண வேலைகள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக தரையை கொங்கிரீட் பண்ணுவதற்காக ரூபா 500,644 இற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு, நேர்கூலி அடிப்படையில் மேற்கொள்வதற்காக ரூபா 457,117 தொகைக்கான பண்டங்கள் பண்ட மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு ரூபா 447,400 தொகைக்கான பண்டங்கள் மற்றும் கூலியாக செலவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் இருப்புப் பதிவேடுகளுக்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிர்மாண வேலையின் இறுதியில் முடிவுற்ற வேலை அறிக்கை ஒன்று மற்றும் கிரயப் பகுப்பாய்வு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் தரையில் இடையிடையே வெடிப்பு ஏற்பட்டிருந்ததுடன் சில இடங்கள் வெற்றாகக் காணப்பட்டதாக 2016 மே 17 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது சபைக்குக் கிடைத்திருந்த மோட்டார் கிரேட்டர் டிபர் வண்டி, க்ரூ கப் வண்டி, தகர்க்கும் இயந்திரம் மற்றும் பெக்கோ லோடர் என்பன சாரதிகள், இயக்குனர்கள் மற்றும் உதவியாளர்கள் இன்மையால் பயன்படுத்தப்படாமல் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2012 ஆண்டின் போது ரூபா 94,000 தொகை பெறுமதியான 20 முற்கம்பி ரோல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 61,100 தொகை பெறுமதியான 13 முற்கம்பி ரோல்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் மூலம் மதிப்பீட்டு வருமானம், செலவுகள் இடையே காணப்படும் முக்கியமான முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்க பூர்வமான கட்டுப்பாடு ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சுற்றாடல் சார் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றல்

-----------------------------------------------------------------------------------------------

அனைத்து அரச நிறுவனங்களும் தனது தூரநோக்கு மற்றும் பணியை நிறைவேற்றும் செயற்பாட்டில் அந்த நிறுவனத்திற்கு பொருத்தமான சுற்றாடல் சார் மற்றும் சமூக பொறுப்புக்களை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை கடைபிடிக்க

வேண்டிய போதிலும் சபையினால், அவர்களின் சுற்றாடல் சார் சமூகப் பொறுப்புக்களை இனங்காண்பதற்கான நடைமுறை ஒன்றினை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சபையினால் வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------

ஊவா மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு அலகின் மூலம் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------------

2009 ஜூன் 09 திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டல் சுற்று நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைப்பதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு

(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்